# கொழும்பு பல்கலைக்கழகம் - இலங்கை

## கலைப்பீடம்

## கலைமாணி முதலாம் வருடப்பரீட்சை (பொருளியல்)

## முதலாம் அரையாண்டுப்பருவ இறுதிப்பரீட்சை - 2023/2024

## ECN 1101 – ஆரம்பச் சிற்றினப் பொருளியல்

காலம் : இரண்டு (02) மணிநேரம்

கணிப்பான்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. வரைபுத் தாள்கள் வழங்கப்படும்.

**எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

---

1. உமது விடையைத் தெளிவுபடுத்த வரைபடங்கள் மற்றும் எண் உதாரணங்களைப் பயன்படுத்தி உமக்குப் பரிச்சயமான பொருளாதாரக் கருத்துகளின் அடிப்படையில் பின்வரும் கருதுகோள் ரீதியான சந்தர்ப்பங்களை விபரிக்குக.

(a) திரு பியதாசவுக்குச் சொந்தமான 10 பேர்சஸ் வளமான வெற்று நிலம் பிரதான வீதியை முகப்பாகக் கொண்டுள்ளது. இந்த நிலத்தை என்ன செய்வது என்று அவர் முடிவு செய்ய முயற்சிக்கிறார், அதற்காக உம்மிடம் ஆலோசனை கேட்கிறார்.

(b) உமது அம்மா உமக்கு இன்று சிற்றுண்டிச்சாலையில் சிற்றுண்டி வாங்க ரூ.300 ஐ கொடுத்துள்ளார். விற்பனைக்கு அதிக பொருட்கள் உள்ளன. இறக்குமதி செய்யப்பட்ட சொக்லேட்டிலிருந்து நீர் அதிக பயனைப் பெற்றுக் கொள்வீர். அல்லது நீர் மற்றைய பொருட்களின் சேர்க்கையை கொள்வனவு செய்யலாம். நீர் என்ன செய்வீர்?

(c) ஒரு பேக்கரி உரிமையாளர் கேக் மற்றும் பனிஸ் ஆகிய இரண்டு பொருட்களை தயாரிக்கின்றார். இந்த பொருட்களின் பல்வேறு சேர்க்கைகளை அவர் தயாரிக்க முடியும், ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் கூடுதலாக ஒரு அலகு கேக்கை தயாரித்தால் பத்து பனிஸ்களை தியாகம் செய்ய வேண்டும்.

(d) திரு குணதாசவுக்கு வயது எண்பது. அவரது பேரன் அவரை ஒரு சிறந்த பாடகர் பங்கேற்கும் இசைக்கச்சேரிக்கு அழைத்துச் சென்றார், ஆனால் இசை மிகவும் சத்தமாக காணப்பட்டது. அதே இசைக்கலைஞரால் நடத்தப்படவுள்ள நாளைய நிகழ்ச்சிக்கு பார்வையாளர்களுக்கு இலவச டிக்கெட்டுகள் வழங்கப்படுகின்றன. திரு குணதாச என்ன செய்வார்?

(e) திரு சாமுவேல் இலங்கையில் உள்ள ஒரு வங்கியில் வங்கி மேலாளராக நல்லதொரு வேலையில் இருக்கின்றார். திரு சாமுவேல் குடிபெயர்ந்து செல்வதற்கான முடிவை எடுப்பதற்கு முன் என்ன விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்?

(ஒவ்வொரு பிரிவிற்கும் 5 புள்ளிகள்)

**2.**

| விலை | கேள்வித் தொகை | நிரம்பல் தொகை |
|---|---|---|
| 7 | 65 | 15 |
| 10 | 50 | 75 |

(a) மேலே உள்ள தரவுகளைப் பயன்படுத்தி கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகளைப் பெறுக. (5 புள்ளிகள்)

(b) இச்சமன்பாடுகளைப் பயன்படுத்தி சமநிலை விலை மற்றும் தொகையை தீர்மானிக்குக. (5 புள்ளிகள்)

(c) நுகர்வோர் மிகையையும் உற்பத்தியாளர் மிகையையும் கணிப்பிடுக.

(5 புள்ளிகள்)

(d) மேலே உள்ள தரவுகளைப் பயன்படுத்தி, கேள்வி மற்றும் நிரம்பலின் விலைசார் நெகிழ்ச்சிகளைக் கணப்பிட்டு அவற்றின் நெகிழ்ச்சித்தன்மை தொடர்பாக கருத்துரைக்குக.

(5 புள்ளிகள்)

(e) பருமட்டான வரைபடங்களை வரைந்து பின்வருவனவற்றை விளக்குக.

(i) வருமானம் குறைவடைந்தால் ஓர் இழிவுப் பொருளுக்கான கேள்வி வளையியில் ஏற்படும் மாற்றம்

(ii) உற்பத்திப்பொருளுக்கு மானியம் வழங்கப்பட்டால் நிரம்பல் வளையியில் ஏற்படும் மாற்றம்

(ஒவ்வொரு பிரிவிற்கும் 2.5 புள்ளிகள்)

**3.**

நுகர்வோன் A இற்கான கேள்விச் சமன்பாடு $Q_A = 16 - 4P$

நுகர்வோன் B இற்கான கேள்விச் சமன்பாடு $Q_B = 20 - 2P$

(a) 0, 1 மற்றும் 4 ஆகிய விலைகளைக் கருத்தில் கொண்டு, A மற்றும் B நுகர்வோருக்கான கேள்வி அட்டவணையை நிரப்புக.

(3 புள்ளிகள்)

| P | $Q_A$ | $Q_B$ | $Q_D$ | $Q_S$ |
|---|---|---|---|---|
| 0 | | | | 6 |
| 1 | | | | 15 |
| 4 | | | | 42 |

(b) இச்சந்தையில் இரு நுகர்வோர் மட்டுமே இருப்பதாகக் கருதி, மேலே உள்ள அட்டவணையில் உள்ள சந்தைக் கேள்வி (QD) நிரலை நிரப்புக. (3 புள்ளிகள்)

(c) மேலே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் தொடர்பான தகவலை வரைபுத்தாளில் வரைக. சமநிலை விலை மற்றும் தொகையைக் காண்க.

(3 புள்ளிகள்)

(d) ரூ.1 கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டால், கட்டுப்பாட்டு விலையில் கேள்வி மற்றும் நிரம்பலை கணிப்பிட்டு, அத்தகைய விலை மிகைக் கேள்விக்கு அல்லது மிகைநிரம்பலுக்கு வழிவகுக்குமா என்பதை விபரிக்குக. (3 புள்ளிகள்)

(e) ரூ.1 என்ற கட்டுப்பாட்டு விலையில், இச்சந்தையின் கறுப்புச் சந்தை விலை என்னவாக இருக்கும் என்பதைக் கண்டறிக.

(4 புள்ளிகள்)

(f) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா அல்லது பொய்யா என்பதனை கூறி வரைபடங்கள், சமன்பாடுகள் அல்லது எண் உதாரணங்களைப் பயன்படுத்தி உமது விடைகளை நியாயப்படுத்துக.

(i) பதிலீட்டுப் பொருட்கள் தொடர்பில் குறுக்கு நெகிழ்ச்சிக் கணக்கீடு எதிர்க்கணியமானது.

(ii) பங்குகளை கைவசம் வைத்திருக்கும் நிறுவனங்கள் அவற்றின் நிரம்பலை மேலும் நெகிழ்ச்சித் தன்மையாக்குகின்றன.

(iii) வருமானம்சார் கேள்வி நெகிழ்ச்சியைக் கணக்கிடுவது உற்பத்தியாளருக்கு விலை நிர்ணய உத்திகளை நிர்ணயிப்பதில் முக்கியமானதாகும்.

(ஒவ்வொரு பிரிவிற்கும் 3 புள்ளிகள்)

**4.**

(a) உமது கணிப்பீட்டுச் செயல்முறை அல்லது காரண காரிய அறிவைப் பயன்படுத்தி எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

(i) ஒரு ஊழியருக்கு ரூ.400 பரிமாற்றக்கூலி மற்றும் ரூ.50 பொருளியல் வாடகையாக இருந்தால், சந்தையில் சமநிலைக்கூலி என்ன?

(ii) ஒரு இயந்திரத்தின் பெறுமானத் தேய்வு விகிதம் 4% என்றால் அந்த இயந்திரத்தின் ஆயுள் எவ்வளவு?

(iii) மெய் வட்டி வீதம் 4% மற்றும் சந்தை வட்டி வீதம் 12% எனின் பணவீக்க வீதம் என்ன?

(iv) X மற்றும் Y இற்கு ஒரே கல்வித் தகுதியும் அனுபவமும் காணப்படுவதுடன் ஒரே வேலையைச் செய்கின்றனர். X பகல் நேரத்திலும் Y இரவு நேரத்திலும் வேலை செய்கின்றனர். Y இற்கு ஒரு மணி நேரத்திற்கு 6000 ரூபாய் கொடுக்கப்பட்டால், X இற்கு வழங்கப்படும் கூலி பற்றி நீங்கள் என்ன சொல்ல முடியும்?

(v) ஒரு தொழில்முயற்சியாளர் தொடர்பில், சாதாரண இலாபம் மற்றும் அமையச் செலவு ஆகியன எவ்வாறு தொடர்புபடுகின்றன?

(ஒவ்வொரு பிரிவிற்கும் 3 புள்ளிகள்)

(b)

ஒரு தொழில்முயற்சியாளர் ஒரு இயந்திரத்தை வாங்க முடிவு செய்கின்றார், அதில் இருந்து அவர் ஒரு வருடத்திற்கு பின்வரும் தேறிய வருமானத்தைப் பெற முடியும். இயந்திரத்தின் ஆயுட்காலம் 3 ஆண்டுகள் மற்றும் அவர் 10%. ஐ கழிவு வீதமாகக் கருதுகின்றார்.

| | |
|---|---|
| வருடம் 0 | 10,000 |
| வருடம் 1 | 15,855 |
| வருடம் 2 | 23,700 |

0 ஆம் ஆண்டில் இயந்திரத்தின் விலை பற்றி நாம் என்ன முடிவு செய்யலாம்? இயந்திரத்தை வாங்குவதற்கு அந்நபர் கடன் வாங்கினால் நிலைமை எப்படி மாறும்? (10 புள்ளிகள்)

**5.**

(a) குறுங்காலத்தில் உற்பத்தியின் அளவு அதிகரிப்பதால், ஊழியத்தின் எல்லை பௌதீக உற்பத்தி ($MPP_L$) ஏன் குறைவடைகின்றது?

(4 புள்ளிகள்)

(b) வெளியீடு அதிகரிக்கும் போது, எல்லை பௌதீக உற்பத்தியில் ஏற்படும் வீழ்ச்சியுடன் தொடர்புடைய 'குறைந்து செல்லும் விளைவானது', சராசரி மொத்தச் செலவு (ATC) வளையியின் வடிவத்தை எவ்வாறு பாதிக்கின்றது?

(5 புள்ளிகள்)

(c) பின்வரும் எண்ணக்கருக்களை வரையறுக்குக : மொத்த வருமானம் (TR), சராசரி வருமானம் (AR) மற்றும் எல்லை வருமானம் (MR). AR=MR என்பதை உறுதிப்படுத்த எந்த நிபந்தனை அவசியம்?

(6 புள்ளிகள்)

(d) ஊழியத்தின் எல்லை பௌதீக உற்பத்தி ($MPP_L$) பற்றிய தரவு உங்களுக்கு வழங்கப்பட்டு, ஊழியத்தின் எல்லை உற்பத்திப் பெறுமதியைக் ($VMP_L$)) கணிப்பிட வேண்டுமாயின், உமக்கு மேலதிகமாக எந்தத் தரவு வழங்கப்பட வேண்டும்?

(4 புள்ளிகள்)

(e) இரு வகையான உற்பத்தித் தொழில் நுட்பங்கள் பற்றிய தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

| நுட்பம் | மூலதனம் | ஊழியம் |
|---|---|---|
| X | 5 | 5 |
| Y | 2 | 15 |

(i) ஓர் அலகுக்கான கூலி ரூ. 200 மற்றும் ஓர் அலகு மூலதனம் ரூ. 500 எனின், நிறுவனம் எந்த தொழில் நுட்பத்தை தெரிவு செய்யும் என்பதை தீர்மானிக்குக.

(3 புள்ளிகள்)

(ii) இவ்விரண்டு நுட்பங்களில் எது ஊழியச் செறிவைக் கொண்டது? உமது விடையை நிரூபிக்குக.

(3 புள்ளிகள்)

**6.**

ஒரு நிறுவனம் தொடர்பாக பின்வரும் தகவல்கள் உமக்கு வழங்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| நீண்ட காலத்தில் சராசரி மொத்தச்செலவு | Rs 14 |
| குறுங்காலத்தில் சராசரி நிலையான செலவு | Rs 8 |
| குறுங்காலத்தில் சராசரி மாறும் செலவு | Rs 10 |

(a) ஆட்டவணையை பிரதி செய்து அதில் ஒவ்வொரு விலைக்கும் உரிய சரியான நிரலைத் தெரிவு செய்து அடையாளமிட்டு உமது தெரிவுக்கான காரணங்களை அட்டவணைக்கு கீழே எழுதுக.

| | குறுங்காலம் | | | |
|---|---|---|---|---|
| விலை | அசாதாரண இலாபத்தில் உற்பத்தி செய்தல் | சாதாரண இலாபத்தில் உற்பத்தி செய்தல் | நட்டம் ஆனால் உற்பத்தியைத் தொடர்தல் | உற்பத்தி நிறுத்தம் |
| 9 | | | | |
| 20 | | | | |
| 11 | | | | |

(9 புள்ளிகள்)

(b) பின்வரும் சோடி எண்ணக்கருக்களுக்கிடையிலான வேறுபாட்டை விளக்க அவற்றை வரைவிலக்கணப்படுத்துக.

(i) நிறைபோட்டியின் கீழ், நிறுவனத்தின் கேள்வி வளையி மற்றும் சந்தைக் கேள்வி வளையி

(ii) குறுங்கால மற்றும் நீண்ட கால இலாபம் தொடர்பான விளைவுகள்

(iii) குறுங்கால மற்றும் நீண்ட கால நட்டம் தொடர்பான விளைவுகள்

(iv) நிறுவனங்களின் குறுங்கால மற்றும் நீண்ட கால நிரம்பல் வளையிகள்

(ஒவ்வொரு பிரிவிற்கும் 4 புள்ளிகள்)

7.

(a) தனியுரிமை தொடர்பில் நுகர்வோர் மிகை, உற்பத்தியாளர் மிகை (இலாபம்) மற்றும் சமூகநல இழப்பு தொடர்பான வரைபடத்தை வரைக.

(6 புள்ளிகள்)

(b) இச்சந்தை நிலைமை நிறைபோட்டியுடன் ஒப்பிடுமிடத்து எவ்வாறு வேறுபடுகின்றது?

(4 புள்ளிகள்)

(c) தனியுரிமையின் கீழ் ஏற்படும் சமூக நல இழப்பைக் குறைக்க அரசு விரும்பினால், (வினா (a) கீழ் வரையப்பட்ட வரைபடத்தைப் பயன்படுத்தி) அது எத்தகைய இரண்டு நடவடிக்கைகளை எடுக்க முடியும்?

(6 புள்ளிகள்)

(d) பின்வரும் எண்ணக்கருக்களை / கூற்றினை வரைவிலக்கணப்படுத்துக.

(i) மூலோபாய தனியுரிமை
(ii) இயற்கைத் தனியுரிமை
(iii) ஒரு தனியுரிமையை உடைப்பதற்கான அரசாங்கத்தித் தலையீடுகள்

(ஒவ்வொரு பிரிவிற்கும் 3 புள்ளிகள்)

8. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் நான்கிற்கு (04) சிறு குறிப்புகள் வரைக.

(i) பூரண நெகிழ்ச்சியற்ற கேள்வியையும் பூரணநெகிழ்ச்சியற்ற நிரம்பலை ஏற்படுத்தும் காரணிகள்
(ii) மறைமுக கூட்டு (Tacit Collusion) மற்றும் தனியுரிமை
(iii) விலை மற்றும் விலை அல்லாத போட்டி
(iv) உற்பத்தி இயல்தகவு வளையியை இடம்பெயரச் செய்யும் காரணிகள்
(v) தனியுரிமை மற்றும் தனியுரிமை போட்டியின் கீழ் நிறுவனத்தின் கேள்வி வளையி
(vi) குறைந்தபட்ச கூலியை விதிப்பதால் ஏற்படும் விளைவுகள்
(vii) உத்தரவாத விலையை விதிப்பதால் ஏற்படும் விளைவுகள்

(ஒவ்வொரு பிரிவிற்கும் 6.5 புள்ளிகள)